# பாட்டுத்திறத்தாலே.....

"பழமை பழமையென்று
பாவனை போலன்றிப்
பழமை இருந்தநிலை - கிளியே
பாமரர் ஏதறிவார் ?"
- பாரதி

கவிஞர் இரா. அரங்கனாதன்
22, காவேரி வீதி, வள்ளலார் நகர்
நயினார்மண்டபம், புதுச்சேரி-605 004
இந்தியா.
☎ 91-413-2358392

'பாட்டுத்திறத்தாலே' என்கின்ற இந்த கவிதை நூல் 1992-ன் சிறந்த இலக்கியப் படைப்பாக தேர்வு செய்யப்பட்டு புதுவை அரசின் சார்பாக கம்பன் புகழ் இலக்கியப் பரிசும் பாராட்டும் வழங்கப்பட்டதாகும்.

## ஞானக்கோயில்

ஞானக் கோயிலில்
வீணை மீட்டுவோம்
நாளும் ஒளிதரும்
தீபம் ஏற்றுவோம் !

வாழும் உண்மைபல வாழவும் - இங்கு
மாந்தர் தெய்வமென மாறவும்
சூழும் நன்மைபல சூழவும் - நெஞ்சில்
தூய நினைவுதினம் தோன்றவும்
- ஞானக் -

வானம் முழுவதையும் ஆளுவோம் - நாம்
மனித நேயமதைப் பேணுவோம்
மானம் மிகுந்தவராய் வாழுவோம் - இந்த
மண்ணில் வசந்தவிழா காணுவோம்
- ஞானக் -

என்றும் இளமைமனம் வேண்டுவோம் - நாம்
எதிலும் புதியசுகம் தேடுவோம்
நன்று நன்றுஇந்த வையகம் - என
நாதம் முழங்கி இசை பாடுவோம்
- ஞானக் -

## மணிமுடி வீழ்ந்தது*

ஆணான தமிழ்ச்சிங்கம் படுத்ததே அன்னைதமிழ்
அணிந்தமணி முடிவீழ்ந்ததே !

ஐயகோ தமிழ்க்குலம் ஒருதனிக் கவிஞனை
அந்தோ பறிகொடுத்ததே !

தேனாக இனித்தஅவன் எழுத்தினை வார்த்தைகளில்
தீச்சுடர் பொரிபறப்பதைச்

"சிறுத்தையே வெளியில்வா" என்னும்ஓர் வரியினில்
நெறித்திடும் வீரமுழக்கை

வாழ்நாளில் தமிழர்கள் என்றினி கேட்பரோ
வந்தென்றோ அவர்பாடுவார்

வாடாத தமிழகம் வதங்காத தமிழ்மனம்
வாடுதே வதங்குகின்றதே !

ஆணான சிங்கமே பாரதி தாசனே
ஆறுதல் எமக்கில்லையோ

அழுகிறோம் வீழ்கிறோம் புலம்பிடு கின்றமே
அண்ணலே பெரும்புலவனே !

* கவிஞர் அவர்கள் மறைந்த நாளன்று எழுதப்பட்ட இறங்கற்பா.

## பாவேந்தர்பத்து

சிறுத்தையே வாவென்று சீறியதார்? கைம்மை
குறித்திங்கே நெஞ்சம் குமுறி - வெறுத்தே
சமுதாயத் தீமை தகர்க்கப் புரட்சி
இமியேனும் கண்டவர்யார் இங்கு !

இங்கே எவர்வாழ்ந்தார் எங்கும் தமிழியக்கம்
பொங்கிப் பெருகிப் புகழ்சேர்க்க - சங்கே
முழங்கென்று கூறி முழக்கி மொழிக்கு
வழங்கி தார்கவிதை வாள்?

வாள் எடுத்துப் போரிட்டான் வாழ்வில் தமிழினத்தைத்
தோளெடுத்தூத தூக்கிச் சுமந்திட்டான் - தாளெடுத்துப்
பாட்டெடுதித் தந்தான் பணம்கேட்டுச் செய்தறியான்
சீட்டெழுதிக் கெஞ்சும் செயல்.

செயலால் புகழ்சேர்த்தான் செந்தமிழைப் பாடும்
குயிலாய் இனிமையுடன் கூவி - அயலாம்
வடமொழியை நீக்கி வரைந்தான் தமிழில்
படைமறவன் பாவேந்தன் பா.

பாவில் அழகாய்ப்ப பனித்துளியை வானத்தைப்
பூவையர் த்மைமைப் பூதுமையை - மாவடுக்
கண்கொண்ட பிள்ளைக் கனியமுதை யார்அவர்போல்
பண்கொண்டு பாட்டிசைப் பார் !

பாரதி தாசன்தான் பாவேந்தன் என்றாலும்
பாரதி தாசன்பா வேந்தர்க்கே - பாரதி
காதலைப் பாடினான் கைம்பெண் மறுமணத்தை
ஆதரித் தானா அவன்?

அவன்புதுமைப் பெண்ணை அறிமுகந்தான் செய்தான்
இவன்தானே பெண்ணுரிமை என்னும் - நவயுகத்தைப்
பாடினான் ! இங்கே பகுத்தறிவுப் பாதையால்
சாடினான் சாதி இருள்!

சாதி இருளை மதஇருளை இம்மண்ணின்
பாதி இருளையும் பாவேந்தன் - ஆதிநாள்
தொட்டிருந்த எல்லா அழுக்கைத் துடைத்தெறிந்தேன்
கட்டுரை யால்கவிதை யால் !

கவிதையால் இங்கே கடவுள் மறுப்பும்
கவிதையால் நல்ல கருத்தும் - கவிதையால்
மூடப் பழக்க முறியடிப்பும் பாவேந்தர்
மேடை சமைத்ததனால் மெய்!

மெய்யான காதலும் மெய்யாய்ப் பகுத்தறிவும்
மெய்யான பெண்மையின் மேன்மைகளும் - அய்யா நீ
கூறும் கவிதைகளும் கோணலாய்ப் போனதால்
சீறும் சிறுத்தையே வா !

## பாவேந்தர் வளர்த்த பைங்கிளி

தெனென்னும் மையூறிச்
சிரித்தாடும் அழகான மலர்க்காட்டு
தென்றல் என்னும்

மானன்ன சிலைப்பெண்ணாள்
மையூறித் திகழ்கின்ற பொன்வண்டு
மயக்கும் கண்ணால்

ஏனென்னைப் பார்க்கி றீர்
எதைக்கண்டுடீர் எனக்கேட்டு முகமெல்லாம்
சிவக்க நின்றாள்

வானென்னும் சேலைக்குள்
வனப்பென்னும் பொன்மேனி பூரிப்பில்
மயங்கி நின்றேன்!

மின்னொத்த சின்ன இடை
வெடுக்கென்று முறிந்துவிடின் அம்மாடி
வெட்கம் என்றே

பொன்னொத்த மலர்ப்பாதம்
நோவாமல் நோவாமல் அடிவைத்துப்
பொறுமை யோடே

என்னைத்தான் நெருங்கியவள்
இளமையெனும் மலர்பூத்தச் செடியைப்போல்
எதிரில் நின்றாள்

கன்னத்தைத் தொடச்சென்றேன்
கலுக்கென்று சிரித்தபடி சற்றேநில்
கவிஞ என்றாள் !

வார்ப்படமே நான்கவிதை
வரைந்தெடுப்பேன் என்றுனக்குச் சொன்னவர்யார்
மதுவே இங்கே

போர்ப்படைபோல் அணியணியாய்ப்
புலவர்களும் கவிஞர்களும் வாழ்கின்றார்
புதுமை  செய்வார்

தேர்ப்போலும் அவர்முன்னே
சின்னவன்நான் என்னைப்போய்க் கவிஞனென்னு
செப்பு கின்றாய்

ஆர்ப்பரிப்பர் கேட்டுவிட்டால்
அவரெல்லாம் என்றேன்நான் அதைக்கேட்டே
அவளும் சொல்வாள் :

மலர்என்னில் எல்லாமும்
மலராமோ ரோஜாவாய் மல்லிகையாய்
மணக்க ஆமோ

சிலையென்னில் அத்தனையும்
சிலையாமோ மாமல்லன் வடித்திட்ட
சிற்பம் ஆமோ

கலையென்னில் எல்லாமும்
கலையாமோ ஏட்டினிலே வரைவதெலாம்
கவிதை ஆமோ

பலருள்ளார் என்றாலும்
பாவேந்தர் போல்தமிழில் அழகாகப்
பாட ஆமோ !

சிங்கமவர் !  தமிழுக்குத்
தீங்கென்றால் ஒரெட்டாய்ப் பாய்கின்ற
சீறும் வேங்கை !

இங்கில்லை அவரைப்போல்
எழிலான தமிழுக்கே அணிசேர்ப்பார்
இந்த நாளில் !

திங்களைப்போல் குளிர்தூவும்
செழுங்கவிதை அவர்கவிதை ! பூங்காவின்
தெளிந்த ஓடை !

பொங்கிவரும் காவேரிப்
புதுவெள்ளத் தமிழாலே கவிபாடும்
புரட்சி வேந்தர் !

ஏன்பெண்ணே உன்வாயால்
என்னையொரு கவிஞனென சற்றேமுன்
இயம்பி நின்றாய்

நானென்ன பெருங்கவிஞன்
நறுமலரே என்றதற்குப் பதிலேதும்
நவின்றி டாமல்

வான்முட்டும் புகழெய்தி
வாழ்ந்திட்ட பாவேந்தன் பேர்பாடி
வாழ்த்தி நின்றாய்

மீன்கண்ணைப் பெற்றவளே
விடையென்ன ஏனென்னைக் கவிஞ என
விளித்தாய் என்றேன் !

காதலரே அவசரமேன்
கவிஞர்க்கே உரித்தான வேகம்ஏன்
காட்டு கின்றீர்

போதவிழா மொட்டென்னும்
பூவாக உங்களெதிர் நிற்கின்ற
பூவை தன்னை

மாதரசி வாவென்று
வரவேற்றுக் கரம்பற்றி அழைத்துங்கள்
மடிய மர்த்தி

மோதிவரும் அலையாகி
மோகத்தால் விரைந்தென்னைத் தழுவியொரு
முத்தம் தாரும் !

ஆம் அதற்குப் பின்சொல்வேன்
அதுபற்றி எனச்சொன்னாள் நானுமவள்
அழகில் சொக்கிப்

பூமழையாய்ச் சுவைமுத்தம்
பொழிந்திட்டேன் அவள்மேனி முழுமையிலும்
புதுமை செய்தேன்

தாமரையின் அடுக்கிதழில்,
தளிர்வட்டப் பச்சிலையில் உருள்கின்ற
தண்ணீர் முத்தில்,

பூமியினில் வீழ்கின்ற
புதுமழையில், வெண்பணியில், மலர்ந்தாடும்
பூக்கள் தம்மில்,

குமிழ்ச்சிரிப்புச் சிரிக்கின்ற
குழந்தையெனும் தெய்வத்தின் பூவுடலில்,
கொஞ்சும் பேச்சில்,

இமைமுழுதும் மைதோய்த்தே
இருவிழியின் கடைவீச்சால் பேசுகின்ற
இளையார் தம்மில்,

நமைவெல்வார் யாரென்றே
நடைபோடும் சிறுவர்களின் பூப்பாதம்
நடக்கும் பாங்கில்,

அமைதியுடன் நிழலாடும்
அழகென்னும் பேரொளியில் குளித்திட்டோம்
அவளும் நானும் !

வறுமையெனும் குழலில்பலர்
வாழ்வென்னும் சிறுதோணி அலைக்கழிக்க
மாட்டிக் கொள்ளல்,

ஒருதுணையும் இல்லாத
ஊமையராய்ப் பலபெண்கள் தனிமையினில்
உள்ளம் நோதல்,

பெருமையுடன் பலமனிதர்
பேச்சாலும் மிடுக்காலும் போலிகளாய்ப்
பிதற்றி நிற்றல்

இருமனமும் ஒன்றாகி
இணைந்தபடி உலகத்தைப் பார்த்ததனால்
இதயம் நொந்தோம் !

எத்தனையோ வகைத்தான
இயல்புடைய மாந்தர்களை அவர்வாழ்க்கை
இயம்பும் ஒன்றை,

நித்திரையே இல்லாமல்
நெடியபல சிந்தனையால் இராப்பொழுதை
நீட்டிப் போரை,

பித்தர்களாய் முழுநாளும்
பெண்வாடை அடிக்கின்ற திசைதேடும்
பேயர் தம்மை

சித்திரையின் நிலவொத்தத்
திருமுகத்தான் தன்னோடு உலகெங்கும்
திரிந்து பார்த்தேன் !

விடிகின்ற வரைஅன்னாள்
விருந்திட்டாள் மறுக்காமல் என்னுடைய
விருப்பம் தீர்த்தாள் !

ஒடிகின்ற நிலையோடே
உள்ளதொடு சிற்றிடையாள் சட்டென்றே
ஓடப் பார்த்தாள் !

சடையென்னும் குழல்பற்றித்
தளிர்க்கரத்தைப் பின்பற்றி எழுந்தேபோய்த்
தாவிக் கட்டி

விடையெங்கே சொல்லேடி
விளையாட்டா மெய்தானா கவிஞஎன
விளித்த தென்றேன் !

பாவேந்தர் தமக்குப்பின்
பாவேந்தன் நீங்கள்தாம் என்றந்தப்
பாவை சொன்னாள்

நாவேந்தா வார்த்தையடி
நான்அவர்க்கோ ஈடாவேன் எனக்கேட்டேன்
நளினி சொல்வாள்:

பூவேந்தி அவருடைய
பூப்பாதம் சமர்ப்பித்தேன் பிறகந்தப்
பூக்கள் தம்மை

மூவேந்தர் நினைவேந்தி
முழுமாலை யாய்க்கொணர்ந்தேன் உங்கட்கு
முடிப்ப தற்கே

எனப்பாவை ஒருமாலை
ன்கழுத்தில் அணிதற்காய் ஆவலுடன்
ஏந்தி நின்றாள்

பனிப்பூவே யார்நீயாம்
பரிகாசம் ஏன்என்னைச் செய்கின்றாய்
பகர்வாய் என்றேன்

தனிப்பெரிய மன்னவராய்த்
தமிழ்க்காத்தப் பாவேந்தர் வளர்த்திட்டத்
தையல் என்னை

இனிப்போடு 'மறுமலர்ச்சி'
என்பார்கள் புத்துலக எழுத்தாளர்
எனச்சி ரித்தாள் !

மறுமலர்ச்சிப் புதுப்பெண்ணே
வாழ்த்துக்கள் சிறப்புறுக பாவேந்தர்
மகளே என்றேன்.

ஒருமலர்ச்சி நான்கண்டேன்
உம்எழுத்தில் ஆதலினால் இளங்கவிஞ
உரைப்போன்: என்னைத்

திருமணம்செய் தேகொண்டு
சிறப்பித்தால் என்னவாம்நீ தீந்தமிழை
செப்பும் என்றாள்

ஒருமனமாய்ச் சேர்ந்திட்டோம்
உலகமெலாம் பாவேந்தர் புகழ்பரப்ப
உறுதி ஏற்றோம் !

## கற்பனாதேவி

செந்தமிழ் தந்தவன் நீ - கலைஞர்
சிந்தையின் மந்திரம் நீ

சந்தன மணம்நீ தாமரை மலர்நீ
சகலமும் எழிலுடன் தருங்கலை வாணி
விந்தைநீ வாழ்வினில் மேன்மைதந் தாய்நீ
மேதினி மீதினில் வீணையின் இசைநீ
- செந்தமிழ் -

கலையெனில் பரதமாம் அற்புத கலைநீ
கவியெனில் பாரதி தாசனின் கவிநீ
சிலையெனில் பல்லவன் செதுக்கிய சிலைநீ
தேரெனில் திருவா ரூர்திருத் தேர்நீ
- செந்தமிழ் -

மலர்களும் சோலையும் வானமும் ஆகி
வையகம் முழுமையும் நிறைந்தனை வாழி
கலைகளும் சிலைகளும் கவிதையும் ஆகி
கலந்தனை எங்கணும் கற்பனா தேவி
- செந்தமிழ் -

## தாய்மை

புதுமைகள் செய்வோம் தோழியரே - இந்த
புவியெலாம் வாழி வாழியவே !

பதுமைகள் அல்ல பெண்குலமே - இளம்
பாரதம் காப்பது தாய்க்குலமே
கதவுகள் திறந்து வெளிவந்தோம் - இனி
காண்போம் காண்போம் புதுயுகமே !
- புதுமைகள் -

மாதர்கள் தருவது வாழ்வாகும் - அவர்
மஞ்சள் முகம்தா மரையாகும்
மேதினி என்பது பெண்ணாகும் - வீரம்
விளைப்பதும் அவர்தம் கண்ணாகும் !
- புதுமைகள் -

வான வெளியிலும் உலவிடுவோம் - நாம்
வாழ்வின் ஒளியென நிலவிடுவோம்
ஞானியர் மேதையர் தமக்கெல்லாம் - வரும்
நாளையும் நாம்தாம் தாயாவோம் !
- புதுமைகள் -

## மான்கள் புலியை ஜெயிக்கவேண்டும்

மாற்றம் வேண்டும் - ஒரு
மாற்றம் வேண்டும் !

மூடிய மேகம் கலையவும்
மூடப் பழக்கம் ஒழியவும்
கேடு விளைப்பவர் மடியவும்
கிழக்கும் மேற்கும் இணையவும்
- மாற்றம் -

புரட்சி மனங்கள் பெருகவும்
புதுமைக் கலைகள் மலரவும்
வரட்சி நிலைமை தொலையவும்
மகிழ்ச்சி வாழ்க்கை நிலவவும்
- மாற்றம் -

தெளிந்த சிந்தனை பிறக்கவும்
சிறந்த கற்பனை உதிக்கவும்
வளைந்த முதுகுகள் நிமிரவும்
மான்கள் புலியை ஜெயிக்கவும்
- மாற்றம் -

# பொறுமையின் எல்லை

உழைப்பவர் நாங்கள் கொழுப்பவர் நீங்கள்
ஓகோ இதுதான் சட்டமோ
ஒவ்வொரு வழியிலும் ஏழைகள் தம்மை
ஒடுக்குதல் உங்கள் திட்டமோ !

அழுபவர் நாங்கள் அடிப்பவர் நீங்கள்
அடிமைகள் என்னும் எண்ணமோ
அழுபவர் ஒருநாள் அடிப்பவ ராக
ஆகார் என்பது திண்ணமோ !

கஞ்சியும் கூழும் குடிப்பவர் நாங்கள்
காப்பியும் ஓவலும் நீங்களோ
கண்ணுக் கினிமையாய் அணிபவர் நீங்கள்
கந்தலும் அழுக்கும் நாங்களோ !

மஞ்சள் கிழங்கைத் தாலியில் கட்டி
வாழ்பவர் எங்கள் பெண்களோ
மாலையும் வயிர மணிகளும் அணிந்து
மகிழ்பவர் உங்கள் பெண்களோ !

கோவணத் தோடு காடு வயல்களில்
கூலிக் குழைப்பதெம் பிள்ளையோ
கூலிங் கிளாசும் கோட்டும் சூட்டுமாய்
ஸ்கூட்டர் விடுவதும் பிள்ளையோ !

பூவிலே படுத்துப் புரள்பவர் நீங்கள்
புழுதியில் கிடப்பவர் நாங்களோ
பொறுமையின் எல்லை மீறிடு மாயின்
புரட்சியை மறிப்பவர் தாங்களோ !

இன்றைய உலகம் சென்றிடும் பாதை
எவ்வித பாதை தெரியுமோ
எழுந்தவர் நெஞ்சம் எரிமலை யானால்
என்ன நடந்திடும் புரியுமோ !

ஒன்றெனும் உலகம் காண்பதற் காக
உழைப்பவர் கரங்கள் சேர்ந்தனர்
ஒரு கொடி நிழலில் ஒருகுலம் என்பதால்
உடைமை யாளர்இனி தீர்ந்தனர் !

## படையென்ன பண்ணும்

ஓலைக் குடிசையும்
சேலைக் கிழிசலும்
உண்மையில் என்றைக்கு
மாறும் - துயர்
ஒவ்வொரு வீட்டினர்
ஒவ்வொரு நாட்டினர்
உள்ளத்தில் இருந்தென்று
தீரும்?

உப்பிலாக் கஞ்சியும்
துப்பிலார் ஆட்சியும்
ஒழிந்தென்று ஒழிந்தென்று
போகும் - தினம்
உழைப்பவர் வியர்வையால்
கொழுப்பவர் பணம்பொது
உடைமையாய் என்றைக்கு
ஆகும் ?

நேற்றைக்கும் இன்றைக்கும்
இருந்திட்ட நிலைமையே
நாளைக்கும் இருக்கவோ
வேண்டும் - மன
நிம்மதி இல்லாத
சஞ்சல வாழ்க்கையே
நீடிப்ப தோஎந்த
ஆண்டும் ?

சோற்றுக்கும் துணிக்கும்
அஞ்சியும் கெஞ்சியும்
துயர்பட்டுக் கிடப்பதோ
இன்னும் - ஓ
தோழனே போர்க்கொடி
ஏந்திக் கிளம்புக
சுரண்டுவோர் படையென்ன
பண்ணும் ?

## புதிய சமுதாயம்

புதிய சமுதாயம் - அதுஒரு
புதிய சமுதாயம் !

உண்மையை மறைப்பவர் இல்லை - பிறர்
உழைப்பினை சுரண்டுவார் இல்லை
பெண்மையைப் பழிப்பவர் இல்லை -தெய்வப்
பேச்சினை எடுப்பவர் இல்லை !
ஏனெனில் -
-புதிய -

திருடர்கள் என்பவர் இல்லை - அங்கு
செல்வர்கள் என்பவர் இல்லை
குருடர்கள் கூனர்கள் இல்லை - சிறு
கொடுமையும் இழைப்பவர் இல்லை !
ஏனெனில் -
- புதிய -

வறுமையை அறிந்தவர் இல்லை - அங்கு
மக்களை ஏய்ப்பவர் இல்லை
சிறுமைகள் செய்பவர் இல்லை - தொழில்
செய்திடத் தயங்குவார் இல்லை !
ஏனெனில் -
- புதிய -

மூடப் பழக்கங்கள் இல்லை - அங்கு
முக்திக்கு மார்க்கங்கள் இல்லை
கூடிக் கெடுப்பவர் இல்லை - யார்க்கும்
குறுகிய சிந்தனை இல்லை !
ஏனெனில் -
- புதிய -

## சொந்தம் கொண்டு வாழ்க

தென்னை மரத்தில் தொங்கும் கூடு
சிட்டுக் குருவி வீடு - நீ
சிட்டுக் குருவி போன்று வானில்
சிறகை அசைத்துப் பாடு !

புன்னை மரத்தில் சுழலும் ஈக்கள்
பூத்துக் குலுங்கும் பூக்கள் - நீ
பூவில் சுழலும் வண்டின் இசைபோல்
புனைக இனிய பாக்கள் !

காட்டில் ஆடும் வண்ண மயில்கள்
கவிதை இசைக்கும் குயில்கள் - நீ
கலைஞன் ஆகி இனிய வாழ்வின்
காவி யங்கள் பயில்க !

தோட்டம் எங்கும் மலர்கள் மணக்கும்
துளிர்க்கும் செந்தேன் இனிக்கும் - நீ
சொந்தம் கொண்டு வாழ்க மண்ணில்
தொலையும் எல்லாப் பிணக்கும் !

## எழுத்தே ஆயுதமாய்

போலிகளே அரசாளும்
சமுதாயக் கேடான
பொய்மைகளைத் துடைத்தெறிய வேண்டும்

கூலிகளும் காலிகளும்
மக்களுக் கிழைத்துவரும்
கொடுமைகளை இனங்காட்ட வேண்டும்

வேலிகளை விலங்குகளை
ஒடித்துப் பொடியாக்க
விதியொன்று செய்தாக வேண்டும்

ஏலுமிது நமக்கிதனை
என்பதனால் எழுத்தாளர்
எதையேனும் செய்தாக வேண்டும் !

கொடிவைத்துப் பிழைப்புதினம்
நடத்திடும் அரசியலைக்
குறிவைத்துத் தகர்த்தாக வேண்டும்

நடிகர்க்குச் சங்கங்கள்
வைத்திங்கு புகழ்பாடும்
நரியைப் பரியாக்க வேண்டும்

அடிகளார் ஆஷாட
பூஷிகளின் வேஷமதை
அம்பலப் படுத்திடவும் வேண்டும்

இடியோடு பெரும்புயலை
உருவாக்க எழுத்தாளர்
எதையேனும் செய்தாக வேண்டும் !

திக்கெதுவும் தெரியாமல்
இருளிலே கிடப்பார்முன்
சிறுதீயைப் பெரிதாக்க வேண்டும்

மக்கள் பெரும்படை
அமைத்திங்குச் சமுதாயம்
மாற்றமுறத் துணைநிற்க வேண்டும்
செக்கச் சிவந்துவரும்
வானத்தை எழுதுகோல்
சித்திரப் படுத்தவேண்டும்
இக்கட்சி அக்கட்சி
கிடக்கட்டும் எழுத்தாளர்
எதையேனும் செய்தாக வேண்டும் !

## எங்கள் தேசம்

கங்கை யமுனை எங்கள் நதிகள்
காவிரி வைகை எங்கள் நதிகள்
தங்கம் புரளும் எங்கள் நதிகள்
சந்தன மரங்கள் மிதக்கும் நதிகள்
        எங்கள் நதிகள் - இவை
        எங்கள் நதிகள் !

விந்தியம் இமயம் எங்கள் மலைகள்
வேங்கடம் பொதிகை எங்கள் மலைகள்
சந்ததம் புகழ் சாற்றும் மலைகள்
தவமுனி வோர்கள் வாழும் மலைகள்
        எங்கள் மலைகள் - இவை
        எங்கள் மலைகள் !

இந்து மாக்கடல் எங்கள் கடலே
இருபுறங் கடலும் எங்கள் கடலே
எந்தையர் மரக்கலம் செலுத்திய கடலே
இன்றும் என்றும் எங்கள் கடலே
        எங்கள் கடலே - இவை
        எங்கள் கடலே !

எங்கள் நதியெலாம் தவழ்க !
எங்கள் மலையெலாம் உயருக !
எங்கள் கடலெலாம் முழங்குக !

## ஆயிரம் பூக்கள் மலரட்டும்

பூக்கள் ஆயிரம்
பூத்துக் குலுங்குக
புதுமைக் கருத்தால்
வையம் துலங்குக !

பாக்கள் இயற்றும் பாவலர் எழுத்தால்
படித்துத் தேர்ந்த பட்ட தாரியால்
தீக்கனல் பரப்பும் சிந்தனை யாளரால்
சிற்பம் ஓவியம் தேர்ந்த கலைஞரால்

- பூக்கள் -

தத்துவம் வளர்க்கும் வித்தகர் தம்மால்
சட்டம் பயின்ற மேதைகள் அறிவால்
புத்தகத் தொழில்கள் புரிந்திடு வோரால்
புரட்சி பெரும்படை அமைப்பவர் பேச்சால்

- பூக்கள் -

நாட்டியம் திரைப்படம் நடத்துவார் திறத்தால்
நலந்தரு மருந்தால் வளந்தரு பவரால்
காட்டையும் மேட்டையும் திருத்துவார் கரத்தால்
கற்பனை வானில் மிதப்பவர் அறிவால்

- பூக்கள் -

விஞ்ஞா னங்களால் விவசா யத்தால்
விண்ணை முட்டிடும் கட்டிடக் கலையால்
பொய்ஞ்ஞா னங்களைப் போட்டுப் புதைப்பதால்
பூமியின் எல்லாச் சாமியும் அழிப்பதால்

- பூக்கள் -